**எஸ்.டி.சி .எண். 2685/2023 நாள்- 10.11.2025 பக்கம்/**

**எ.சா.1.பால்சுசில் த/பெ.ஆரோக்கியசாமி**

**புகார்தாரர் ஆஜரில்லை. பிரிவு 256 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) எனக்கு தற்சமயம் 50 வயதாகிறது. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் B.Com Commerce மற்றும் Diploma in phsychology and Diploma in psychotheraphy படித்துள்ளேன். மேற்கண்ட படிப்பை நான் அனுக்கிரஹா Institute ல் படித்தேன். இது முறைப்படியான Degree இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பதில் அறிவிப்பில்14.07.2020 பக்கம் 3 பாரா 2 ல் சொல்லியுள்ள படி, ஆளுமைத்திறன் தலைமைப்பண்பு அனுபவத்தின் வாயிலாக தான் தொழிலாக செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். தன்னிடம் பயிற்சிக்கு வருவோருக்கு அவர்களின் தேவையை எவ்வளவு கால நிர்ணயிப்பில் கண்டறிவேன் என்றால் குறிப்பிட்ட நேரம் சொல்லமுடியாது.

2) நான் எனது பதில் அறிவிப்பில் மற்றும் தனது வாக்குமூலத்தில் 28.05.2020 அன்று கரூருக்கு வந்து சுந்தர்ராஜ் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மணி என்கிற பாலதண்டபாணி என்பவரை சந்தித்து, அவரிடம் வழக்கு காசோலையை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்பது பொய் என்றால் சரியல்ல. மேற்கண்ட 28.05.2020 என்ற தேதியானது கொரனாகாலம் லாக்டவுன் என்றால் சரிதானா என்றால் அது பகுதியாக அனுமதிக்கப்பட்ட லாக்டவுன் ஆகும். MSME (Small and Mediam Size Enterprises) Certificate அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. என்னிடம் இருந்ததால் என்னை திண்டுக்கல்லில் இருந்து கரூருக்கு வர அனுமதித்தார்கள்.

3) இந்த சான்றிதழல் தொழில் செய்வதற்காக கொடுக்கப்பட்டதா என்றால் தொழில் செய்வதற்காக மட்டுமல்ல சேவை செய்வதற்காகவும் கொடுக்கப்பட்டது. எனது பதில் அறிவிப்பு மற்றும் நிரூபன வாக்குமூலத்தில், சுந்தர்ராஜ், மணி என்கிற பாலதண்டாயுதபாணி ஆகியோர் என்னை ஏமாற்றிவிட்டதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். இவர்கள் இருவர் மீதும் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. என் மீது வழக்கு தொடுத்துள்ள பால்சாமி 29.10.2020 அன்று காலை 11.30 மணியளவில் இந்த காசோலையின் மோசடி வழக்கை வாபஸ் பெற புகார்தாரரை மிரட்டினீர்கள் என 09.11.2020 ம் தேதியன்று புகார்தாரரால் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அது பொய்யான புகார் ஆகும்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

4) என்னை மிரட்டுவதற்காக புகார்தாரரால் கொடுக்கப்பட்ட பொய் புகார். **அந்த புகார் மனுவில் மனு ரசீது 769/2020 ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகார் சம்பந்தமாக என்னை காவல் துறையில் விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள். அந்த விசாரணையில் பால்சாமி கொடுத்த புகாரில் உள்ள தகவல்கள் அனைத்தும் பொய் என உறுதிசெய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் விசரித்தது பொய் என நிரூபனமாக்குவதற்கு ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. புகார் தாரர் கொடுத்த புகாரானது உண்மை என்றும் மேற்படி வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் Ex:D1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணமா என்றால் ஆமாம். அந்த மேற்படி ஆவணம் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள I-Phone 11 என்ற மொபைலில் இருந்த தகவலை Screen shot எடுக்கப்பட்டு, எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு அச்சிடப்பட்டது என்றால் சரிதான். Ex:D1 ஆவணத்தில் சொல்லியுள்ள I-Phone மற்றும் Laptop-ல் அந்த குறுஞ்செய்தி இல்லை என்றால் சரியல்ல. அது தற்போதும் எனது மொபைலில் உள்ளது. தாங்கள் கேட்டுக் கொண்டால் காட்ட தயாராக உள்ளேன். ஒரு தகவலை Screen shot எடுப்பதற்கும், Photo ஆக Capture எடுப்பதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியுமா தெரியும். Ex:D1 ஆவணத்தில் சொல்லப்பட்ட குறுஞ்செய்திகள் யாவும் என்னால் போலியாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

6) Ex:D1 ஆவணத்தில் குறுந்தகவலை காட்டக்கூடிய Mobile யாருடையது என்றால் என்னுடையது தான். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு நான் இருமுறை பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய கடந்த 14.07.2020-ம் தேதிய பதில் அறிவிப்பு (Ex:P7) மற்றும் கடந்த 21.08.2020-ம் தேதிய (Ex:P9) பதில் மறுப்பு அறிவிப்பு ஆகியவற்றில் இவ்வழக்கின் புகார்தாரர் பால்சாமி, சுந்தர்ராஜ், மணி என்ற பாலதண்டாயுதபாணி மற்றும் செந்தில்குமார் ஆகியோர்கள் மீது திண்டுக்கல் மாவட்ட குற்ற பிரிவில் புகார் கொடுப்பேன் என தெரிவித்துள்ளேனா என்றால் சரிதான். ஆனால் எவ்வித புகாரும் இதுநாள் வரை அவர்கள் மீது நான் கொடுக்கவில்லை. புகார்தாரரிடம் நான் கடன் பெற்றுவிட்டு, இவ்வழக்கிற்காக பொய்யான காரணங்களை தெரிவித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

7) ம.சா.ஆ.2 காசோலை என்னுடையது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் கண்ட மற்ற வாசகங்களில் உள்ள கையெழுத்து என்னனுடையது அல்ல. சுந்தர்ராஜ், மணி என்ற பாலதண்டாயுதபாணி ஆகியோர்கள் எனது நண்பர்கள் என்றாலும், அவர்களை என்னுடன் கூட்டு சேர்த்து கொண்டு பொய்யாக இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையின் படி புகார்தாரருக்கு ரூ.3,00,0000- கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார்தாரர் கோரியுள்ள பரிகாரம் புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், நான் தண்டிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்